# பாலர் கல்வி

| தொகுதி 28 | சோபகிருதுஸு வைகாசி - ஆனிமீ<br>1963 ஜூன் | பகுதி 3 |
| --- | --- | --- |

## ஆரம்பக் கல்விக் கருத்தரங்கு

தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் 53வது கல்வி மாநாட்டில் 16-5-63ம்தேதி பிற்பகல் 2-15 மணிக்கு ஆரம்பக்கல்வி கருத்தரங்கு ஆரம்பமாயிற்று.

தலைவர் :—திரு. K. குழந்தைவேல், முதல்வர், பெரியநாய்க்கன் பாளையம் பயிற்சிக் கல்லூரி.

கன்வீனர் :—திரு. B. திருநாவுக்கரசு, தலைமையாசிரியர், கோவை நகர மன்ற ஆதாரப்பள்ளி.

பொருள்கள் :—1. ஆரம்பக் கல்வி விஸ்தரிப்பும், அதனால் ஏற்படும் பிரச்சினைகளும்.

2. ஆரம்பக் கல்வியிற் படிப்படியாகத் தர-உயர்வுக்கான வழிகள்.

3. ஆரம்பக் கல்வி நிர்வாகம் (பஞ்சாயத்து யூனியன் பங்கு).

திரு. கணபதி அவர்கள் இறை வணக்கம் பாடிய பின்னர் கன்வீனர் திரு. B. திருநாவுக்கரசு அவர்கள் அனைவரையும் வரவேற்று, "கல்வி சம்பந்தமாகப் பலதரப்பட்ட சம்பவங்கள், அனுபவங்கள், குறைபாடுகள் கண்டிருக்கலாம். அவைகளை இங்கே வெளியிடுங்கள்; கருத்துக்களை பரிமாறிக் கொள்ளுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். மேலும் 300 மக்கள் உள்ள பகுதியில் ஓர் ஆரம்பப் பள்ளி இருக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் எண்ணம்; இதைப் பற்றி சிந்திப்பதோடு இடவசதி, போதனைக் கருவிகள், ஆசிரியர் பற்றுக்குறை, மாணவர்கள் விகிதாசாரம் போன்றவைகளும் கவனம்பெற வேண்டும் என்றார்.

நாம் படிப்படியாக உயர்வுக்கான வழிகளையும், ஆசிரியர்களின் தரத்தை உயர்த்துவதற்கான வழியையும் காண வேண்டும் என்றும் இதற்காகக் கருத்தரங்கு மாநாடுகள், புதிய பயிற்சிகள் போன்றவைகளை எப்போது, எப்படி நடத்தலாம் என்பதைப் பற்றியும் தங்கள் கருத்துக்களைச் சொல்லவேண்டும் என்றும் ஆசிரியர்கள் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருப்பதற்கான வழியையுங் காணக் கருத்துக்களைச் சொல்வதோடு, ஆரம்ப ஆசிரியர்களுக்கு மேல் சபையில் பிரதிநிதித்வம் கிடைப்பதற்கு 17(3) C அரசியல் சட்டத்தை திருத்துவதற்கான வழியையும் ஆய்ந்தறிய வேண்டும் என்றார்.

தலைவர் தம் முன்னுரையில் கல்விக் கூடங்கள் மக்கள் கையில் இருக்க வேண்டும் என்றார். சர்வாதிகாரி நாட்டில் பள்ளிகள் அரசாங்கம் கையில் இருக்கும்; ஜனநாயக நாட்டில் பள்ளிகள் மக்கள் கையில் இருக்கும். இதேபோல் அமெரிக்க நாட்டில் மக்கள் கையில் இருக்கிறது. அங்கே அதனால் கல்வி முன்னேற்றம் அடைந்திருப்பதைக் காணலாம். இங்குப் பஞ்சா

யத்து யூனியன்கள் நிர்வாகத்தில் கல்வி முன்னேற்றம் அடைந்துள்ளதை நாம் காணுகின்றோம். ஆசிரியர்களுக்கும் மாற்றல் இல்லாமல் சொந்த ஊர்களுக்கு அருகில் விருப்பத்தோடு பணிபுரிகிறார்கள். மாணவர்களும் அதிகமாகப் பள்ளியில் சேர்வதோடு பள்ளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. இது போன்ற நன்மைகள் மிகுந்துள்ளன. மாணவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்துத் தரம் அமையும் என்றார். ஆசிரியர்களுக்கும் அவ்வப்போது மறு பயிற்சி கொடுக்கவேண்டும் என்றார். எல்லாரும் கருத்தரங்கில் பங்கு கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கோவை நகரமன்ற ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் தலைவர் திரு N. சிவசாமி, ஆரம்பக் கல்வி விஸ்தரிப்பும் அதனால் ஏற்படும் பிரச்சனைகளும் என்ற தலைப்பை ஒட்டி பேசினார்கள். அவருடைய உரையில் கட்டாயக் கல்வித் திட்டத்தினாலும், மக்களுடைய எழுச்சியினாலும், ஆரம்பக் கல்விக் கூடங்கள் ஒவ்வொரு குக்கிராமத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 5 வயது முடிந்த குழந்தைகள் சேர்க்க வேண்டும் என்பதாலும் குழைந்தைகள் அதிகமாக சேர்ந்துள்ளார்கள். மேலும் இலவச மதிய உணவு கொடுப்பதாலும், ஒழுங்கு உடை, இலவச புத்தகங்கள், நோட்டுகள் கொடுப்பதாலும் பள்ளிகளில் குழந்தைகள் அதிகமாகச் சேருகிறார்கள். இதனால் பள்ளிக் கூடங்கள் அதிகமாகத் துவக்க வேண்டியுள்ளன. அதிகமாக ஆரம்பிக்கும்போது இட வசதியும் பாடக் கருவிகளும் இருக்கவேண்டும். 5 வயதுள்ள குழந்தைகள் பள்ளியில் சேர்வதால் பிற்பகலில் அக் குழந்தைகள் தூங்க ஆரம்பித்து விடுகின்றன. இதற்குப் பள்ளியில் வசதி உள்ளதா? உட்காருவதற்கே இடமில்லை. மேலும் அதிகமான குழந்தைகள் இருப்பதால் தரமும் பாதிக்கப்படுகிறது. அதனால் ஆசிரியர் ஒருவருக்கு 25 குழந்தைகள் இருந்தால் ருஷ்யா, இங்கிலாந்து போன்ற நாட்டில் தேர்ச்சியில் வெற்றி அடைவது போன்று இங்கும் தேர்ச்சி பெறுவார்கள் என்பதை உறுதியுடன் சொல்லலாம். இக் குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் டாக்டர் பரிசோதனை செய்யவேண்டும். இதனால் பிற்காலத் தலைவர்களாக இவர்கள் சிறந்த காத்திரமாக நாட்டைக் காத்து நல்ல முறையில் ஆளுவார்கள். புதிய பள்ளிகள் ஆரம்பிக்கும்போது ஆசிரியர்கள் குடியிருப்பு வீடும், அதைத் தொடர்ந்தே கட்டவேண்டும். ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி செய்வதோடு, வைத்திய வசதியும் சிறந்த முறையில் செய்யவேண்டும். இப்போது உள்ள வைத்திய வசதி நகரத்தில் உள்ளவர்களாலேயே பயன் அடைய முடியவில்லை என்றால் கிராமத்தில் உள்ளவர்கள் எவ்வாறு பயன் அடைய முடியும்? இவ்வசதி ஆசிரியர்களுக்கு உண்மையாகப் பயன் படும்படியாக இருக்க வேண்டும். ஆசிரியர்களையும் அடிக்கடி மாற்றல் செய்யக்கூடாது என்று சொல்லி தம் உரையை முடித்துக் கொண்டார்.

"ஆரம்பக் கல்வியில் படிப் படியாக தரம் உயர்வு" என்ற தலைப்பில் காளியாபுரம் பழனியம்மாள் ஆதாரப் பயிற்சிப் பள்ளி தலைமையாசிரியர் திரு. வே. ந. ஆறுமுகம் அவர் சொற்பொழிவாற்றும்போது "தரம் உயர்வு என்று சிந்திக்கும் போதே எதில் தரம் உயர வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. அப்போது எது சரியான கல்வி என்று ஆராயும் அவசியம் ஏற்படுகிறது. குழந்தைகளுக்குக் கல்வி திணிக்கவேண்டிய அவசியம் இல்லை; அவர்களுக்குள்ளேயே இருக்கும் பூரணத்துவத்தை அறியச் செய்தால் போதும். கல்வி மேதைகளின் பிதாவான ரூஸோ கல்வியை மூன்று பிரிவுகளாக பிரிக்கிறார்: (1) இயற்கைக் கல்வி அல்லது ஆன்மீக மலர்ச்சி, (2) நடைமுறைக் கல்வி அல்லது புற அறிவும் அனுபவமும், (3) தனி மனிதன் கல்வி அல்லது

முந்திய இரண்டையும் தொடர்புப் படுத்தல். இப்போதைய கல்வியை அகக் கல்வி, புறக் கல்வி என பிரிக்க லாம். இதில் பெரும் பங்கு கொண்டது அகக் கல்வியேயாகும். இதற்கு எந்த பாடத் திட்டமும் கால அட்ட வணையும் உதவாது. உண்மையான வாழ்க்கைதான் அளிக்க முடியும். மிகச் சிறிய பகுதியாகிய புறக் கல்வி யைத்தான் நாம் அளிக்க முடியும், இன்றைய போதனை முறை இயற் கைக்குச் சிறிதும் பொருத்தமில்லா மலும் விபரீதமாகவும் கேலிக்கிடமாக வும் ஆகிவிட்டது. குழந்தையின் மூளையில் எவ்வளவு பாடங்களைச் சொல்லித் திணிக்கலாம் என்பது தான் இன்றையப் பாடநிலை. இதனல் குழந்தைக்கு கடமை என்ற நிலைமை நிலைக்க விடாமல் ஒரு தண்டனை என்ற எண்ணத்தை உண்டு பண்ணி விடுகிறது. விளையாடும்போது உடற் பயிற்சி செய்கிறோம் என்ற உணர் வின்றி எதைப் பெறுகிறதோ அதே மாதிரி வாழ்க்கைச் செயல்களிலே ஈடுபடும்போதே கல்வியையும் பெற வேண்டும்.

ஆரம்பக் கல்வியின் நிர்வாகத்தில் பஞ்சாயத்து யூனியன் பங்கு என் னும் தலைப்பில் பெரிய நாய்க்கன் பாளையம் கிராமியக்கல்லூரி ஆசிரியர் திரு M. ரகுராம் சிங் M. A. M. Ed. அவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். தம் உரையில் தமிழகத்தில் 1960ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ம் தேதி புதியதாக பஞ்சாயத்து ஆட்சி துவக் கப்பட்டு 1961ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ம் தேதிக்குள் மாநிலம் முழு வதிலும் இவ்வாட்சியின் கீழ் வந் துள்ளது. 1962ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து, மாநிலம் முழுவதும் உள்ள பஞ்சாயத்து யூனியன்கள் 373ம் ஜில்லா போர்டிட மிருந்து ஆரம்பப் பள்ளிகளை முழுவதும் நிர் வகிக்கத்து வங்கின.

இந்தியாவிலுள்ள சுமார் பத்து லக்ஷம் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் சுமார் இருபது லக்ஷம் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கும் கட்டாய இலவசக் கல்வியை அமுலாக்கு வதில் பயிற்சி அளிக்கவேண்டும். இவற்றை யெல்லாம் தீர்வு காண் பது மிக முக்கிய கடமை என் பது ஒருபுறமிருக்க இவ்வளவு சிறப்பான கட்டாய இலவசக் கல்வித் திட்டம் பஞ்சாயத்து ஆட்சி சூழ்நிலை யில் வெற்றியடைய வேண்டுமானல் ஆசிரியர்கள் பெற்றோர்கள் பஞ்சாயத் துத் தலைவர்கள் ஆகிய மூன்று சாரா ரின் மனப்பான்மையை ஒட்டியுள் ளது. இவர்கள் மனப்பான்மையை எந்த அளவு வளர்க்கிறோமோ அந்த அளவு இத்திட்டம் வலிமை பெறும் என்பது உறுதி" என்ருர்.

பெரிய நாய்க்கர்பாளையம் கிராமியக் கல்லூரி ஆசிரியர் திரு சண்முகம் அவர்கள் பேசும்போது காந்திஜியின் கனவை நனவாக்க ஏற்பட்டவை பஞ்சாயத்து யூனியன். இது சர்வோ தயத்தில் ஒன்று, சர்வோதயம் என் பது பரவல் முறை. எண்ணிக்கை அதிகமானல் கூட தரம் குறையக் கூடாது. தரம் உயர்த்தல் வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் தரத்தையும் உயர்த்த வேண்டும். கிராம ஆசிரிய ரின் துணையால் தான் எத்திட்டமும் கிராமத்தில் வெற்றி பெறும்.

பெரிய நாய்க்கன் பாளையம் பஞ் சாயத்து யூனியன் தலைவர் திரு துரைசாமி நாயுடு அவர்கள் பேசும் போது கிராமத்தில் கட்சிகள் இருப்ப தால் பஞ்சாயத்து யூனியனிடம் ஆரம்பக்கல்வி ஒப்படைக்கக் கூடாது என்று சொல்லுகிருர்கள். எங்கள் யூனியனில் முன்பு ஐம்பது சதவீதம் படித்து வந்துள்ளார்கள். தற்போது 90% படிக்கிருர்கள்.

தூத்துக் குடி ஆசிரியர் திரு M. சுப்ரமணியம் பேசும்போது உயர் நிலைப்பள்ளி மாதிரியே ஆரம்பக்கல் விக்கும் பாடத்திட்டம் தேவையென் ருர். தணிக்கையாளர்கள் குறைகளை

மட்டும் காட்டி குற்றம் சுமத்துவதை விட்டு ஆலோசகர்களாக இருக்க வேண்டுமென்றார்.

இராமநாதபுரத்தை சேர்ந்த D. சபாஸ்டின் அவர்கள் ஆசிரியர்களுக்கு மேல் சபையில் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டு மென்றார்கள்.

மதுக்கரை A. A. C. சிமெண்ட் பேக்டரி உயர்தர ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியர் ஆசிரியப் பயற்சி காலத்தை அவசர நிலைமையை ஒட்டி ஓராண்டு காலமாக குறைக்க வேண்டும் என்றும் ஆரம்பப்பள்ளியில் ஐந்தாவது தேறிய மாணவனுக்கு உயர் நிலைப்பள்ளியில் ஆரும் வகுப்புக்கு தேர்வு வைத்து எடுப்பது வருந்தத்தக்கது என்றார்.

மாநாட்டின் தலைவர் திரு ராஜா அய்யர் M.A.L.T. M.L.C. அவர்கள் பேசும் பொழுது 300 ஜனத்தொகை உள்ள இடத்தில் பிரைமரி, 450 ஜனத்தொகை உள்ள இடத்தில் ஒரு அப்பர் பிரைமரி தேவை என்றார்.

பாடதிட்டம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்றார்.

கோவை திரு வெங்கிடாசலம்அவர்கள் ஆசிரியர்களுக்கு ஓட்டுரிமை வேண்டுமென்றார்.

திருச்செந்தூர் பிரதிநிதி திரு பேரின்பராஜ் நினைத்த நேரத்தில் ஆசிரியர்களை வேலையை விட்டு நீக்கும் முறையை ஒழிக்க வேண்டுமென்றார்.

தலைவர் முடிவுரையின் போது ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு ஆரம்பப்பள்ளி முக்கியமென்றார். மாணவர்களின் தேவையை ஒட்டி தேர்வு இருக்கவேண்டும் என்றும், பொது மக்களின் தொடர்பு இருக்கவேண்டும் என்றும் ஆசிரியர்களுக்கு ஓட்டுரிமை சீரான உடை ஆகியவை வேண்டு மென்றும் கூறினார்.

கன்வீனர் நன்றி கூறி தேசிய கீதத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

---

## 53-ஆம் ஆண்டு சென்னை இராச்சியக் கல்வி மாநாடு

இம்மாநாடு மே திங்கள் 16, 17, 18-ஆம் நாட்களிற் கோவையிற் சிறப்புற நிகழ்ந்தது. தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் ஆண்டுக் கல்வி மாநாடு, இதற்குமுன் கோவையிலே சீருஞ் சிறப்புமுற இருமுறை நடந்தது நம் நினைவிலே நிலைத்துள்ளது; இவை இரண்டிலும் பன்மடங்கு சிறப்புடன்—இதுகாறும் நடந்த மாநாடுகளிலேயே மிகச் சிறந்ததென யாவரும் பாராட்டுமாறு—சீரியதோர் வகையிலே இவ்வாண்டுகளில், இம்மாநாட்டினை நிகழ்த்திக் காட்டியுள்ளனர். கோவை நகரிலுள்ள ஆசிரியப்பெருந்தகையோர் கடந்த ஆண்டிற் சென்னையில் நடந்த மாநாட்டிலேயே இவர்கள் தமது அவாவினை அறிவித்துப் பேருக்கத்துடனே ஏற்பாடுகள் செய்து, நாடு முழுதும் வியக்கும் வண்ணம் மாநாட்டினை நிகழ்த்தியுள்ளனர். முன்னுட் கலியாணம்போல் நான்கு நாட்கள் நடந்தது மாநாடு. ஆசிரியப பிரதிநிதிகள் 1500க்கு மேற்பட்டவர், கலியாணத்தில் சம்மந்திகளைப்போல் நான்கு நாட்கள் உபசாரம் பெற்று, கோவை நகரினரின் விருந்தோம்பலை வாழ்த்திச் சென்றனர். பீளமேடு P. S. G. பொறியியற் கல்லூரி மாண

வர் இல்லத்தில் மாநாடு நடந்தது. கோவை மாவட்ட ஆசிரியர் சங்கத் தலைவர், உயர்திரு G. R. தாமோதரன் அவர்கள் வரவேற்புக் குழுவின் தலைவர்; தமது அலுவல்களை யாவற்றையும் மறந்து, நிகழ்ச்சிகள் யாவற்றிலும் முன் நின்று, எள்ளளவேனுங் குறையில்லாமல் உதவி வந்தார். இவரது பெரு மனப்பான்மைக்கேற்ப ஏனை ஆசிரியர்களும் தொண்டுக் குழாச் சிறுவரும் நான்கு நாட்களிலும் எப்போதும் பந்தரிலேயே தங்கித் தமது பணியை மனமுவந்து செய்து மகிழ்ந்தனர். யாவர்க்கும் இலவசமாக அளித்த உணவின் சீர்மை, நாவன்மை படைத்தோராலும் நவில அரிதாம். காலைச் சிற்றுண்டி, நண்பகலுணவு, மாலையில் தேனீர், இரவு உணவு இவை வேளா வேளைக்கு, வேண்டுமவர்க்கெல்லாம், சிறிதேனுங் காலதாமதமன்றி வேண்டியவாறு அளிக்கப்பெற்றன. இராமாயணத்திலேயே பரத்துவாசர் அளித்த விருந்தினைப் பற்றிப் படித்துள்ளோம். அதன் திறனை இப்போதுதான் காணும் வாய்ப்பு எமக்கு ஏற்பட்டது ; அவரது விருந்தை யுண்டவர்கள், " யாம் இவ்விடத்தை விட்டகலோம்" என்று கூறியவாறு எமக்கு ஒரு நிலை ஏற்பட்டது.

முதல் நாள் மாலைப் பொருட் காட்சியைத் திறந்து வைத்தார், சென்னை மாநிலப் பொதுக் கல்வி இயக்குநர், உயர்திரு N. D. சுந்தரவடிவேலு அவர்கள். இங்கு வைக்கப்பெற்றவை யாவும் கல்வி சம்பந்தமானவை ; இவற்றுள் பல, ஆசிரியர்களது பண்பையும் சிறுவர்களது பண்பையும் ஓங்கச் செய்யும் பண்புடையன. இத்தகைய ஏடுகள் சிலவற்றை அச்சிட்டு ஆசிரியர்கட்கும் சிறுவர்கட்கும் வழங்குதல் சாலச் சிறந்ததெனக் கூறினர். கல்வி இயக்குநர், அன்றியும் விஞ்ஞானம், தரை நூல் முதலியன கற்பிப்பதற்குப் பயன் பெறும் உபகரணங்கள் பல, மிகக் குறைந்த செலவிலே நாமே செய்து கொள்ள இயலும் என்பதையும் நாம் கண்கூடாகக் கண்டோம் ; இவற்றை நாம் சிறுவர்களைக் கொண்டே செய்யவுமியலும்.

மே பதினாறும் நாள் காலை 10 மணிக்கு மாநாடு துவங்கியது. கல்வி-நிதி அமைச்சர், உயர்திரு M. பக்த வத்ஸலம் அவர்கள், மாநாட்டினைத் துவங்கி வைத்தார். உயர்திரு M. இராஜா அய்யர், M.L.C. அவர்கள் மாநாட்டின் தலைவர். உயர்திரு G. R. தாமோதரன் அவர்கள் ஆசிரியர்களை வரவேற்றார். கல்வி-நிதி அமைச்சர், ஆசிரியர்களது மேம்பாடுபற்றி விரிவாக எடுத்துக் கூறிப் பள்ளிகளிற் கல்வியின் தரம் ஓங்கி நிற்கவேண்டுமென்றார். மும்மொழித் தீர்வு, தொன்மொழியாகிய வடமொழியின் நிலை முதலியனபற்றித் தம்மருங் கருத்துக்களை வெளியிட்டார். உயர்திரு M. இராஜா அய்யர் அவர்கள் கல்வியின் நோக்கங்கள், கற்பிக்கப் பயனுறும் மொழி, பாடதிட்டம், கல்வி வளர்ச்சி, கற்பவர்களது ஒழுக்கு, கற்பிப்பவர்களுக்கு வேண்டியவை முதலியன பற்றி யாவரும் போற்றும் வகையிலே தம்மருங் கருத்துக்களை கூறினர்.

முதல் நாள் மைசூர், ஆந்திரப் பிரதேசம், கேரளா இவற்றில் இயங்கும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள், நமது சங்கப் பிரதிநிதிகள் சிலருடன் கூடித் தென் பிராந்தியத்திற்கென ஒரு பொதுச் சங்கம் நிறுவவேண்டுமென்று தீர்மானம் செய்தனர். இது பற்றிய விதிகளை வகுக்க முதற் கூட்டம் ஜூலையில் பங்களூரில் கூடும், ஏனைப் பிராந்தியக் குழுவினருடன் இங்ஙனம் தொடர்பு கொண்டால், நம் நிலை மேன்மேலென ஓங்கு மென்பது திண்ணம்.

பலதரப்பட்ட ஆசிரியர்கள் யாதொரு வரையுமின்றி முழுமனத்துடன் கூடிய மாநாடு. இஃதொன்றேயாம். துவக்கக் கல்வி, செகண்டரிக் கல்வி, கல்லூரிக் கல்வி, பெண்டிர்

கல்வி, தொழிற் கல்வி இவை பற்றிய கூட்டங்கள் குறிப்பிட்ட காலத்திற் கூடி, வேண்டிய சீர் திருத்தங்களை ஆய்ந்து தீர்மானங்களை நிறைவேற்றின. தலைமை யாசிரியர் இரு முறை கூடி பாடதிட்டத்தை மாற்றி யமைப்பது பற்றிக் கலந்து ஆலோசனை நிகழ்த்தினர்.

தீர்மானங்கள் பல ஆசிரியர்களால் முழு மனத்துடன் நிறைவேற்றப் பெற்றன. இவற்றுள் மிகவும் முக்கியமானவை செகண்டரி கல்விதிட்டம். வேலை செய்யும் நாட்களை 220 ஆக உயர்த்துவது என்பன பற்றியவாம். சென்னை இராச்சியத்திலே சிறுவர் கல்வி கற்குங் காலத்தை 10 ஆண்டுகளிலிருந்து 11 ஆண்டுகளாக உயர்த்திருப்பது சரியே யென்றும், எனினும் இக்காலத்திலே கற்கும் கல்வியின் தரம் ஏனை இராச்சியங்களில் வரும் தரத்திற்கு ஒப்பாக வேண்டும் என்றும் இதற்கேற்பப் பாடதிட்டத்தை வகுக்கவேண்டும் என்றும் ஒருமனதாக எடுத்தோதினர் ஆசிரியர்கள். பள்ளியில் வேலை செய்யும் நாட்களை 220 ஆக உயர்த்துவதை ஒருவரும் ஏற்கவில்லை இவ்வாறு உயர்த்துவதால் சிறுவர்களது உடல் வளர்ச்சியும் மன வளர்ச்சியும் தடைபடும். ஆதலால் கல்விநிலை ஓங்காதென்றும், ஆசிரியர்களது சுமையும் தாங்கவொண்ணு தென்றும் எடுத்தோதினுர்கள், கல்வி முறைகளில் ஆற்றல் வாய்ந்தவர்கள்.

மாநாட்டில் மூன்ரும் நாள் மாலை நிகழ்ந்த பேரவையிலே பொறுப்பாளர் தேர்வு முடிந்தபிறகு வரவேற்புக் குழுவினர்க்கு நன்றி நவின்றனர். பெரியோர், செய்வன யாவும் தமது கடமையே எனக்கருதிய உயர்திரு G. R. தாமோதரன் அவர்கள், இந் நிகழ்ச்சியை யாம் விரும்பிய வகையிலே விரிவாக நடத்த விரும்பவில்லை. இவரது மனப் பண்பினை போல், இவரது குளிர்ந்த உள்ளத்திற்கு ஒப்பாகும் வானமும் மழை பொழிந்து கூட்டத்தை விரைவில் முடித்தது.

இவ்வாறு பலவகையாலும் போற்றத் தகுந்த முறையிலே மாநாட்டினை நடத்தித் தந்த, கோவை யாசிரியர்களுக்கு எமது நன்றியும் பாராட்டும் உரியன.

---

## கல்வி மாநாட்டில் கூடிய கருத்தரங்குகள்

### 1. செகண்டரிக் கல்வி

இது முதல் நாள் மாலை 2-30 மணிக்கு கூடியது. உயர்திரு. M. அருணசலம் அவர்கள் தலைமை யேற்ருர். உயர்திரு. மைகேல் பொன்னுச்சாமி அவர்கள் கூட்டத்தை இயக்கி வைத்தார். ஆசிரியர் பலர் பேருக்கத்துடன் ஆலோசனை கூறினர். வரப்போகும் பாடதிட்டங்களைப் பற்றி ஆய்ந்து, சரிதம் பூகோளம் என்பது ஏற்ற இடம் பெறவேண்டும் என்றும், சிறுவர்களுக்குப் பரீட்சையின் சுமையைக் குறைப்பதற்குச் செய்யவேண்டியது பத்தாம் படிவத்தின் இறுதியில் சில பாடங்களில் பரீட்சை எழுதச் செய்தலும், மற்றவைகளைப் பதினென்ரும் படிவத்தின் இறுதியில் எழுதச் செய்தலும் நலம்பயக்கும் என்றும் கூறினுர்கள். ஆங்கிலம், தமிழ், சமூக நூல் இவற்றுள் பள்ளிகளில் தரம் குறைந்துவருவது பற்றிச் சில ஆசிரியர் எடுத்துக் கூறி, சரியான முறைகளை ஆசிரியர் கையாளவேண்டுமென்றனர். ஆங்கிலத்தில் "Structural Method" எப்போதும் ஏற்றதன்று என்றும், சம்பாஷணை முறையிலே மொழியைப் பயிற்றுவிக்க

வேண்டும் என்றும், பொதுவாக ஆசிரியர் பணியை ஏற்று நிகழ்த்திவரும் யாவரும் ஒரு மனத்துடன் கல்வியின் தரத்தை உயர்த்தவேண்டும் என்றும் கூறினர். ஆசிரியர்கள், செகண்டரிப் பள்ளிகளில் ஆண்டிற்கு 220 நாட்கள் 1200 மணி பாடம் கற்பிப்பதென்பது இயலாததொன்ருகும். இப்போதே 200 நாட்கள் உழைப்பதுமன்றி, பாடத்திட்டத்திற்குப் புறம்பான நிகழ்ச்சிகள் (extra-curricular activities), தேர்வுகளில் விஞத் தாள்கள் திருத்துவது, பயிற்சிகளைத் திருத்துவது, பிற்போக்கான மாணவர்க்குத் தனியாகக் கற்பிப்பது இவற்றில் ஈடுபட்ட ஆசிரியர்கட்கு ஓய்வு என்பதே கிடையாது. இதற்கு மேலும் உழைப்பதெனில் உடல் நிலை குன்றும் என்று அநுபவம் வாய்ந்தவர்கள் எடுத்துக் கூறினர்கள்.

## 2. தலைமை ஆசிரியர் கூட்டம்

இவ்வரங்கு முதல் நாள் மாலை 5-30 மணிக்குக் கூடி மறுபடியும் மூன்ரும் நாள் காலை 9 மணிக்கு இயங்கியது, தலைமையாசிரியர், தலைமையாசிரியைகள் பலர் இவ்வரங்கில் கலந்து கொண்டனர். உயர்திரு. S. நரசிம்மன் அவர்கள் தலைமை யேற்ருர்; உயர்திரு சின்னத்தம்பி நாயுடு அவர்கள் கூட்டத்தை இயக்கிவைத்தார். செகண்டரிக் கல்வி பாட திட்டம் பற்றிப் பலர் தமது கருத்துக்களை வெளியிட்டனர். சரிதம் - பூகோளம் என்ற பாடத்தின் நிலை முன்போல் இருக்கவேண்டும் என்றும் பரீட்சை எழுதும்போது மாணவர்களது சுமையைக் குறைப்பதற்குப் பத்தாம் படிவ முடிவில் சில பாடங்களில் பரீட்சையும், பதிஞேராம் படிவ முடிவில் சில பாடங்களில் பரீட்சையும் நிகழ்த்தலாமென்றும் ஆலோசனை கூறினர். விருப்பப் பாடங்கள் (electives) பற்றிச் சரியான ஒருமுடிவிற்கு வர இயலவில்லை. இவை பற்றிய ஆய்வுகளைத் தென்னிந்திய ஆசிரியர் சங்கம் செய்யலாமென்று இக்கருத்தரங்கு வெளியிட்டது. இராச்சியம் முழுதுக்கும் தலைமையாசிரியர் சங்கம் ஒன்று நிறுவ விரும்பியது இக்கருத்தரங்கு. எனினும் இதிற் கூடியுள்ளவர்கள் பெரும்பாலும் இச்சங்கம் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின்கீழ் அத்துடன் இணைப்புக்கொண்டே இயங்க வேண்டும் என்று விரும்பினர்.

## 3. பெண் கல்விக் கருத்தரங்கு

கோவை நகரில் பேர்வாய்ந்த டாக்டர் அண்ணவரீத் அம்மையார் தலைமை யேற்ருர். G. ஹேமப்ரபா அம்மையார் கருத்தரங்கினை இயக்கிஞர். முதன் முதலில் திருமதி ஸரஸ்வதி ஸ்ரீநிவாஸன் அவர்கள், பெண்கள் நாட்டின் நிலையை உயர்த்த உழைக்கவேண்டும் என்றும், கிராமங்கள், நகரங்கள் இவற்றுள் யாவற்றையும் துப்புரவாகவும் அழகாகவும் வைத்துக்கொள்ளவேண்டும் என்றும், சிறு பிராயம் தொடங்கியே தையல் வேலை, தோட்ட வேலை, இன்னிசை இவற்றுள் ஆற்றல் பெறவேண்டும் என்றும், இவை கட்டாயப் பாடங்களாக இருக்கவேண்டுமே யொழிய விருப்பப் பாடங்களாக இருக்கக் கூடாது என்றும், இசை, கலை இவற்றுள் பெண்டிர் தேர்ச்சி பெற்று யாவர்க்கும் இவற்றைக் கற்பிப்பதிலும் பயிற்சி பெறவேண்டும் என்று கூறினர். ஸ்ரீ அவிநாசிலிங்கம் வீட்டுக் கலைக் கல்லூரியிலிருந்து (Home Science College) விஜயம் செய்த மூன்று விரிவுரைப் பேராசிரியைகள் (1) பெண்டிரும் பொதுக் கல்வியும், (2) பெண்டிரும் தொழிற் கல்வியும், (3) வீட்டுக்கலை (Home Science Education) என்பன பற்றிப் பேசினர்கள். ஆசிரியைகள் பலர் கருத்தரங்கிற் கலந்து கொண்டனர். பெண்களுக்கெனத்தனிப் பள்ளிகள் வேண்டும் என்றும், பெற்ருேர்கள் ஆசிரியைகளுடன் ஒத்துழைக்கவேண்டும் என்றும், மத சம்பந்தமான கல்வி பெண்டிர்க்கு இன்றியமையாத தென்றும் எடுத்தோதினர்கள்.

4. தொழிற் கல்விக் கருத்தரங்கு

இது இரண்டாம் நாள் மாலை 2-30 மணிக்கு நிகழ்ந்தது. உயர்திரு P. R. ராமகிருஷ்ணன், M. P. அவர்கள் தலைமையேற்ருர். உயர்திரு V. ஸ்ரீநிவாஸ அய்யர், உயர்திரு R. G. சுப்பிரமணியம், உயர்திரு A. K. ரங்கராஜன் இவர்கள் Bifurcated Courses பற்றி உரையாடினர்கள். பொறியியல், விவசாய நூல், Secretarial course இவற்றில் தற்கால நிலையை விவரமாக ஆய்ந்தார்கள், இவ்வரங்கிற் பங்கு கொண்ட ஆசிரியர்கள். வரப்போகும் பாடதிட்டத்தில் இவற்றின் நிலை யாதென விளங்கவில்லை என்றும், இவற்றுள் கல்வி பயிலும் மாணவர்க்குத் தொழிற் கல்வி நிலையங்களிலே சலுகை காட்டப் பெறவில்லை என்றும் இவற்றிலுள்ள பாடதிட்டத்திற்கும் Pre-University பாடதிட்டத்திற்கும் இணைப்பு வேண்டும் என்றும் பாட திட்டங்கள் திருத்தி அமைக்கப்பெற வேண்டும் என்றும் அறிவித்தனர். உயர்திரு P. R. ராமகிருஷ்னன் தமது முடிவுரையிற் கூறியதாவது: தொழிற் கல்வியால் ஏற்படும் பெருமையை நினைப்பது வழக்கமாகிவிட்டது. உண்மையில் மாணவர்கள் இக்கல்வியில் ஊக்கம் காட்ட வேண்டும். பொறிகளை அமைத்து இயக்குவதில் ஆசை கொள்ளவேண்டும். இவ்வாறு பொறிகளை ஆய்ந்து அமைப்பதற்குப் பள்ளிகளிலே வாய்ப்பு அளிக்கவேண்டும். இவ்வாறு வாய்ப்பு இருந்தால்தான் நாட்டிற் தொழிற் கல்வி பரவி, நாடு முன்னேற்றம் பெரும்.

5. ஸபேசன் நினைவுச் சொற்பொழிவு

இரண்டாம் நாள் மாலை 5-30 மணிக்கு டாக்டர் S. R. ரங்கநாதன் அவர்கள் இச் சொற்பொழிவை நிகழ்த்தினர். ஸபேசன் அவர்களது சீரிய பண்புகளைத் தக்க சான்றுகளுடன் எடுத்துக் கூறி, ஆசிரியர்கள் நடந்து கொள்ளவேண்டிய வகையையும் விவரித்தார். சொற்பொழிவு, அறிவும் சுவையும் பொருளும் செறிந்து, கூட்டத்தினரால் நன்கு பாராட்டப்பெற்றது.

---

# பண்ணைச் செய்திகள்

## உழைப்பு மாடுகளுக்கு கொழுத்தாடை நல்ல தீவனம்

(கார்போஹைடிரேட் செறிந்த பொருள்)

கோடையில் பசுந் தீவனம் அதிகமாகக் கிடைக்காத சமயத்தில் கொழுத்தாடையை கரும்பு அறுவடைக்குப் பிறகு மாட்டுத் தீவனமாகப் பயன் படுத்தலாம்.

ஆண்டுதோறும் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 20 மிலியன் டன் கரும்புக் கொழுத்தாடையில் ஒரு சிறிய அளவே தீவனமாகப் பயன்படுத்தப் படுகிறது, எஞ்சியது வீணுக்கப்படுகிறது.

கொழுத்தாடை ஊட்டமுள்ள தீவனம் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இலைகளில் நிரம்ப புரதமும் கார்போஹைடிரேடும் இருக்கின்றன. கொழுத்தாடையை அப்படியே மாட்டுத் தீவனமாக வைக்கலாம். அல்லது குழிப்பாயம் (ஸைலேஜ்) செய்து தீவனமாக வைக்கலாம்.

கொழுத்தாடையுடன் 120 கிராம் பிண்ணாக்கும் ஒரு அவுன்ஸ் உப்பும் சேர்த்து தினம் தீவனமாக வைத்து 40 நாட்கள் பரிசோதனை செய்து பார்த்ததில் எருதுகளும் எருமைக் கடாக்களும் ஆரோக்யமாக இருந்தன வென்றும், எருதின் எடை மூன்று

ராத்தலும், எருமைக்கடாவின் எடை ஏழு ராத்தலும் கூடுதலாகியன என்றும் கண்டு பிடிக்கப்பட்டது.

### தென்னாற்காடில் முப்போக நெல்

தென்னாற்காட்டு விவசாயிகள் மூன்றுபோகம் நெல் பயிரிடலாம். பாலூர் நெல் ஆராச்ச்சி நிலையத்தில் செய்த சோதனைகளால் வெளியாகியது யாதெனில் இரண்டு குறுங்காலப் பயிர்களுக்கு இடையில் நடுத்தர வாழ்நாளுள்ள ஒரு பயிரிட்டு ஆண்டில் மூன்று நெற்பயிர்கள் செய்யலாம் என்பது.

சோதனைக்காக குறுங்காலப் பயிர்களான TKM–6ம், பி.எல்.ஆர். 2ம், நடுக்காலப் பயிர்களான ஏ. எஸ். டி. 5–ம், ஏ. எஸ். டி 11–ம் எடுத்துக் கொள்ளப்பட்டன. 5000 ராத்தல் தழையுரமும், 150 ராத்தல் சூப்பர் பாஸ் பேட்டும் நடவுக்கு முன்னால் போட்டார்கள். மேலும் நடவின் போது 75 ராத்தல் அமோனியம் ஸல்பேட்டும் நடவாகி 30 லிருந்து 45 நாளில் மறுபடி ஒரு தடவை 75 ராத்தல் அமோனியம் ஸல்பேட்டும் இடப்பட்டது.

நடவுக்கும் அறுவடைக்கும் இடை வெகு குறைவான காலமே இருந்ததால், ஒவ்வொரு பயிருக்கும் நடவுக்கு ஒரு மாதம் முன்னால் நாற்றங்காலில் விதை விடப்பட்டது.

சொர்னவாரியில் டி. கே. எம் 6, 3765 ராத்தல் மகசூல் தந்தது. சம்பாவில் ஏ. எஸ். டி 11, 3433 ராத்தல் ஈன்றது. பிறகு போட்ட ஏ. எஸ். டி. 5–ல், 3067 ராத்தல் கண்டது. நவரையில் மறுபடி டி. கே. எம். உச்ச மகசூல் கொடுத்தது. டி. கே. எம் 6, ஏ. எஸ். டி 11, டி. கே. எம் 6, என்ற சுழற்சியில் 9,574 ராத்தலும், டி. கே. எம் 6, ஏ. எஸ். டி 5, டி. கே. எம் 6, என்ற சுழற்சியில் 9208 ராத்தலும் கண்டன.

கட்டாக் மத்திய நெல் ஆராய்சி நிலையத்தில் நடத்திய சோதனைகள் இதை உறுதிப்படுத்தியன.

### ஜப்பானிக்கா இரு பிறவி நெல் நைட்ரஜனால் நல்ல பலன் தரும்,

கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரியில் நடத்திய சோதனைகள் ஜப்பானிக்கா* இண்டிகா நெல் இரு பிறவி இனம் உயர்ந்த மகசூல் தருவதல்லாமல், நிரம்ப உரங்கள் போட்டால் இன்னும் அதிகப் பலனை அளிக்கிறது என்று காட்டின.

இண்டிகா வகை ஜி. இ. பி. 24ஐயும் ஜப்பானிகா வகைகளையும் இனக்கூட்டு செய்து வந்த பயிருக்குப் பலவகை உரங்களிட்டுச் சோதனைகள் செய்யப்பட்டன. 0லிருந்து 120 ராத்தல் வரை அமோனியம் ஸல்பேட்டு, சாதாரணமாக இடப்படும் பசுந்தாள் உரம், 30 ராத்தல் பாஸ்பாரிக் அமிலம் இவைகளுக்கு உபரியாக இடப்பட்டது.

இனக் கூட்டால் உண்டான 30879 30859, 30787 எனப்படும் மூன்று வகைகளும் நிரம்ப உரமிட்டதில் நல்லப் பலன் தந்தன. 30879 என்ற இருபிறவி வகை ஏக்கருக்கு 5000 ராத்தல் அரிசி ஈன்றது. ஒவ்வொரு தடவையும் உரமிட்டதில் நல்ல பலன் தந்தது. ஒரு ராத்தல் நைட்ரஜனுக்கு 16·9 ராத்தல்கள் (ஏக்கருக்கு ரூ. 4·46·2 லாபம்) கண்டது.

ஜெப்பானிகா* இன்டிகா இருபிறவி நெல் பயிரிட்டால் விவசாயிகள் நிரம்ப உரங்கள் போடவேண்டும்.

### பண்ணைச் செய்தி

பருத்தியை மாறுமாரிப் பயிராகச் செய்பவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் செய்வது போலச் சில கலப்புப் பயிர்களை பயிரிட்டு இலாபமடையலாம்.

உளுந்து, கொள்ளு, தினை, நிலக்கடலை, கொத்தமலி, ஆமணக்கு, எள்

போன்ற பயிர்களை நிலத்தின் மண் வாகுக்கு ஏற்றாற்போல தேர்ந்தெடுத்து பயிரிடலாம்.

இதனால் ஏக்கர் ஒன்றுக்கு உபரிச் செலவு ரூ. 6-லிருந்து ரூ. 12 வரை ஆகும். உபரி வருமானம் ரூ. 25 லிருந்து ரூ. 45 கிடைக்கும்.

இதரப் பிராந்திய பருத்தி விவசாயி களும் இதைப் பின்பற்றி லாபமடைய லாம்.

---

# செய்தித் திரட்டு

## பள்ளி ஆண்டு விழா

### பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பாடசாலை: இராட்ணமங்கலம்

இப் பாடசாலையின் ஆண்டு விழா 29-4-63 அன்று யூனியன் தலைவர் திரு P. இராஜமாணிக்க முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உதவி ஆசிரியர் திரு R. K. சீனுவாசன் வரவேற்புரை வாசித்தார். தலைமை ஆசிரியர் திரு. S. ஐயாவு ஆண்டு அறிக்கை வாசித்தார். சேயாறு கோட்டாட்சித் தலைவர் திரு. திருமலாச்சாரி அவர்கள் பள்ளி மாணவ மாணவிகள், பள்ளி ஆசிரியர் கள் யாவருக்கும் ரூ. 1000 மதிப்புள்ள சீருடைகளை வழங்கி சொற்பொழி வாற்றினர். ச. வி நகரகிராமிய விஸ் தரிப்பு பயிற்சி நிலைய துணை முதல்வர் திரு. N. S. குருசாமி அவர்கள் திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைத்து சொற்பொழிவு ஆற்றினர். கிராம பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. R. N. வீரபத்திரன் அவர்கள் தேசிய பாதுகாப்பு நிதிக்கு 100 நன் கொடை வழங்கி சொற்பொழிவு ஆற்றினர். பள்ளித் துணைத் தனிக் கையாளர் திரு. K. தங்கசாமி அவர் கள் சொற்பொழி வாற்றினர். உதவி ஆசிரியர் திரு. D. தேவராஜன் அவர் களின் பெருமுயற்சியால் கற்பிக்கப் பட்ட கலாநிகழ்ச்சிகளையும், வீரபாண் டிய கட்டபொம்மன் எனும் நாடகத் தையும் யூனியன் ஆணையாளர் திரு D. ஜெயராமன் அவர்கள் துவக்கிவைத்து சொற்பொழிவு ஆற்றினர். உதவி ஆசிரியர் திரு S. சின்ன ராசு அவர் கள் நன்றி கூறிய பின் நாட்டு வாழ்த் துடன் விழா இனிது முடிந்தது.

---

# எகோ (ECHO)

(மே மீ° வெளியீடு)

## ஆசிரியரின் அசிரத்தையும் அலக்ஷ்யபுத்தியும்

Dr. வில்லியம் G. கார் (WCOTP ஸெக்ரெடரி-ஜெனரல்) என்பவருக்கு, ஸெக்ரெடரி-ஜெனரல் க்ளீபர் வீலாட் (The Union National des Instituteurs Haitiens) என்பவர் பின்வருமாறு எழுதியுள்ளார் :

"ஆசிரியத்தொழிலில் இன்று காணப்படும் ஒழுக்கக்குறை இவ்வளவு மோசமாக இதுவரை அதன் சரித்திரத்திலேயே காணப்படாத தொன்று.

"ஹெய்டி தேசத்தில் (West Indies) இத் தொழிலின் பொதுநிலை கேவலமாகிக்கொண்டுவருகின்றது. ஆசிரியர்களை நியமித்தலும் அவர்களை மேல்நிலைக்கு உயர்த்தலும் ஆகிய செயல்கள் அரசியல்வாதிகளால் செய்யப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுவதால், இக்காலத்தில் வழங்கும் கல்விமுறை மிக்க கீழ்நிலையில் உள்ளது. சிரத்தையின்மையும் அலட்சிய புத்தியும் வெளிப்படையாக எங்கும்—போதனமுறைக்கல்லூரிகளிலும்கூட—காணப்படுகின்றன. ஆசிரியர்களும் தலைமையாசிரியர்களும் மாணுக்கர்களால் அடிக்கடி அச்சுறுத்தி வெருட்டப்படுகின்றனர்கள். தம் உறவினரும் நண்பரும் 'துவாலியர்' அரசாட்சியின் மூலபலப்படையிலும் 'பிரஸிடெண்ட்' மெய்காப்பாளர்படையிலும் தொண்டாற்றுகின்றனர் என்னும் ஆணவத்தால், மாணுக்கர் இவ்வாறு தவறுபட்ட வழியில் செல்கின்றனர். கஜானுவில் பணம் இல்லை ; அதனுல், பள்ளிக்கூடங்களுக்கு இன்றியமையாத உபகரணங்களும் தேவைகளும் அளிக்கப்படவில்லை. ஆசிரியர்களின் சம்பளங்கள் சிறுகச்சிறுகக் குறைக்கப்பட்டுவருகின்றன.

"இன்னோரன்ன அநியாயங்களுக்கு ஆளாக்கப்பட்ட ஆசிரியர் சக்தியற்றவராயிருக்கின்றனர். அவர்கள் தங்கள் குறையை வாய்மொழி-மூலமாகவோ எழுத்துமூலமாகவோ, தனித்தமுறையிலோ ஒன்றுகூடியோ, வெளியிட்டுக்கூறல் முடியாது. சாதாரண ஆசிரியரின் வேலைநிலைகளைத் திருத்தி உயர்த்துவதற்கு இத்துணை காலம் மும்முரமாக உழைத்துவந்த ஆசிரியர்களுக்கு முற்றிலும் வாய்ப்பூட்டு இடப்பட்டுள்ளது. தனித்துறைப் பள்ளியாசிரியர்களும், அரசியல்பள்ளியாசிரியர்களைப்போலவே, இழிந்த நிலையில் இருக்கின்றனர்.

x x x

## கல்வித்துறையில் பாரபக்ஷம்

"ஒவ்வொருவரும், தம் தாய்நாட்டையும் உள்ளிட்ட எந்த நாட்டையும் விட்டு வெளிச்செல்லவும், தம் நாட்டுக்குத் திரும்பிவரவும் இருத்தற்கு வேண்டிய உரிமையில் உள்ள பாரபக்ஷத்தைப்பற்றிய ஆராய்ச்சி"–

என்பது அண்மையில் ஆராய்ந்து வெளியிடப்பட்ட ஓர் அறிக்கை. எல்லா நாட்டிலும் உள்ள சிறுபான்மைக்கட்சியினரைக் காக்கவும் பாரபக்ஷத்தைத் தடுக்கவும் அமைத்த ஓர் உட்குழு, மனிதவுரிமைகளைப்பற்றி ஆராய்தற்கு அமைத்த குழு, UNESC குழு—இவற்றால் வெளியிடப்பட்டது இவ்வறிக்கை. இவ்வாராய்ச்சி சம்பந்தப்பட்டவகையில் பயன்படத்தக்க செய்திகள் உளவாயின், அவற்றைத் தமக்கு அறிவிக்கும்படி, UN-க்கு உறுப்புக்களாய்ச் சேர்ந்துள்ள நாடுகளின் அரசாங்கங்கள், குறிப்பிட்ட தனித்துறையில் பாடுபட அமைத்த காரியாலயங்கள், ஆலோசனைகூறுதற்கு உரிய யோக்கியதை உள்ள அரசியல்தொடர்பில்லாத சங்கங்கள் முதலியவற்றை, மனிதவுரிமைகளைக் காத்தற்கு என்று அமைக்கப்பட்ட UN பிரிவு, வேண்டிக் கொண்டுள்ளது. இவ் வேண்டுகோளுக்கிணங்க WCOTP விசாரணைக் கமிஷன் பர்லினைக்குறித்து விடுத்துள்ள அறிக்கையை அவ்வுலக-ஸம்மேளனம் ஸமர்ப்பித்துள்ளது.

மனிதவுரிமைகளைப்பற்றிய உலக சாஸனம் (The Universal Declaration of Human Rights) "ஒவ்வொரு தேசத்தின் எல்லைக்குள் வசிப்பதற்கும் விரும்பும் இடத்துக்குக் சுதந்திரத்தோடு போவதற்கும்", ",தாய்நாட்டை உள்ளிட்ட எத்தேசத்தையும் விட்டு வெளிச் செல்லுதற்கும் தன் நாட்டுக்குத் திரும்பி வருவதற்கும்" ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு என்பதனை அதிகாரபூர்வமாக வெளிட்டுள்ளது.

இவ்வாராய்ச்சி, பொருத்தமுள்ள சரித்திரச்சூழ்நிலையை அளித்து, இவ்வுரிமையைப்பற்றிய பாரபக்ஷத்தை வெளிப்படுத்துஞ் சான்றுகளை ஆராய்ந்து, உலகத்திலுள்ள எல்லாத்தேசங்களிலும் இவ்வுரிமையை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் மறுக்கும் கட்டுப்பாடுகளை எடுத்து விளக்குகின்றது. அது செய்த முடிவுகள் பின்வருமாறு: (a) ஒருவன் தன் தாய்நாட்டுக்குத் திரும்பிவரும் உரிமையை ஆராயின், பொதுவாக அதற்கு உரிய நிலை பாதகமாக இல்லை; (b) பிற நாட்டவன் தான் சிறிது-காலம் வாழ்ந்திருந்த ஒரு நாட்டை விட்டு வெளிச்செல்லும் உரிமையைப்-பற்றி ஆராயின், அதற்குரிய நிலை மிக்க சாதகம் உள்ளதாகவே இருக்கிறது; (c) ஒருவன் தன் தாய்நாட்டை விட்டு வெளிச்செல்லும் உரிமையைப் பற்றி ஆராயின், அந் நிலை மிக அனுகூலக்குறைவாகவே இருக்கின்றது; முன்னிலும் தாழ்ந்த மோசமான நிலையில் இருப்பதாகவே கூறலாம்.

பர்லினைப்பற்றிய WCOTP-யின் அறிக்கை, மனிதவுரிமைகளின் உலகசாஸனத்தின் எந்தப்பகுதியைப்பற்றி அந்த உட்குழு ஆராய்ந்ததோ, அதனையே, தனித்த முறையில், எடுத்து விளக்கிக் கூறுகின்றது; அந் நகரத்தை இருபிரிவாக்கும் சுவரொன்று கட்டப்பட்டதனால், அவ்வுரிமை பாதிக்கப்படுவதற்குரிய அச் சான்றினைக் காட்டி நிரூபிக்கின்றது. அவ்-வுட்குழுவின் அறிக்கை, "முன்பு அரசாங்கங்கள், வெளிநாட்டார் தம் நாட்டுக்குள் வர்ராமல் தடுப்பதற்கு, சுவர்களை எழுப்பின; ஆயின், இன்றோ, வெளிப்படையாகவும் சூசகமாகவும், சுதேசிகளையே வெளிச்செல்லாமல் தடுப்பதற்கு அமைத்தவைபோல, அவைகள் கட்டப்பட்டுள்ளன"-என்று தொடர்ந்து வெளியிட்டுள்ளது.

UNESCO, கல்வியில் காட்டும் பாரபக்ஷத்தை எதிர்த்துப் போராடு-தற்கு, நற்சேவைக்குழு (Good Officers Commission) ஒன்றனை அமைத்துள்

ளது. இது டிஸம்பர் 10-ஆம் தேதியில்—UDHR-இன் ஆண்டுநிறைவு-நாளில்—பன்னிரண்டாம் பொதுமகாநாட்டில் நிறுவப்பட்டது; இது கல்வியில் உள்ள ஏற்றத்தாழ்வை எதிர்த்துப் போராடுதற்கு உரிய புதிய சட்ட-பூர்வமான கருவியாகும்.

இக் குழுவில் உள்ள அங்கத்தினர்பதினொருவர் தம் சொந்த ஹோதாவில் ஆறு ஆண்டு தொண்டாற்றுதற்கென்று பொதுமகாநாட்டினுல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். 1960-ஆம் ஆண்டு மகாநாட்டில் (Convention) தீர்மானித்த—1962 மே-இல் பத்து நாடுகளால் உறுதிப்படுத்தப்பட்ட—கொள்கைகளுக்கு மாறுபட்ட முறையில் நடக்கும் ஒரு தேசத்தைக்குறித்து மற்ெருரு தேசம் கூறுங் குற்றச்சாட்டினை இக் குழு ஏற்று ஆராயும்.

அம் மகாநாட்டுநியதிகளுக்குக் கட்டுப்பட்டு ஒப்புக்கொண்ட தேசங்கள், கல்வியில் பாரபக்ஷத்தை புகுத்தும் முறையில் சட்டமுறையிலோ நிர்வாகமுறையிலோ நிபந்தனைகள் இருப்பின், அவற்றை ரத்துசெய்து-விடுதல் வேண்டும். கல்வியில் பாரபக்ஷமாவது,—இனம், நிறம், பால் (ஆண், பெண்), மொழி, சமயம், அரசியல் போன்ற கருத்துமாறுபாடு, தேசீய சமூக அடிப்படை, பொருளாதாரநிலை முதலியவற்றைக் காரணமாகக்கொண்டு காட்டப்படும் வேறுபாடு; அவ் வேறுபாடு, கல்வியில் சமத்துவமாக எல்லாரையும் நடத்தும் உயர்கொள்கைக்குக் களங்கம் ஏற்படுத்தும்; அல்லது, அவ்வுரிமையையே இல்லையாக்கிவிடும்.

x x x

## WCOTP ஸெகரடெரி-ஜெனரல் ஐக்கிய அரபுக்குடியரசுநாட்டுக்கு விஜயஞ் செய்கிருர்.

அரபுஆசிரியர்ஸமஷ்டியின் ஸெகரடெரி-ஜெனரலான மகமது ஸையித் ஆல் ஆர்யான் என்பவர் ஐக்கிய அரபுக்குடியரசின் (United Arab Republic) ஆசிரியர்சபையின் (Syndicate) கூட்டத்துக்கு விஜயஞ்செய்தல் வேண்டும் என்று விடுத்த அழைப்பிற்கிணங்கிச் சென்ற WCOTP செகரடெரி-ஜெனரலான வில்லியம் G. கார் என்பவர், ஏப்ரல் 23-முதல் 26-வரை, கெய்ரோவில் தங்கியிருந்தார். அவரோடுகூட, WCOTP 'பாரிஸ்' அலுவலகத்தின் 'டைரக்ட'ரான திரு. வில்ஹெம் எபர்ட் என்பாரும் சென்றிருந்தார். அவர் U.A.R.-க்கு WCOTP-இன் சார்பில், அலுவலகசம்பந்தமாகப் பலமுறை விஜயஞ்செய்திருக்கிருர். U.A.R.-இன் ஆசிரியர்சங்கத்தின் பிரதிநிதிகள், சென்ற ஆகஸ்டு மாதம், ஸ்டாக்ஹோம் நகரில் நடைபெற்ற WCOTP மகாநாட்டுக்கு விஜயஞ்செய்தனர். U.A.R.-இன் ஆசிரியர்களுக்கும் பிற நாடுகளிலுள்ள ஆசிரியர்களுக்கும் இடையே உள்ள உறவினை WCOTP-இன் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதே Dr. கார் ஆங்கு விஜயஞ்செய்ததன் கருத்து.

x x x

## ஐரோப்பா

இங்கிலாந்து நாட்டில் லீட்ஸ் நகரில் ஆரம்பப்பள்ளிமாணுக்கருக்குப் பிரெஞ்சுமொழி கற்பித்தலில் துணிகரப்பரிசோதனையொன்று செய்யப்பட்டுள்ளது. இச் செய்தி 1963 ஜனவரி 11-இல் வெளியான ஆசிரியர் (The Teacher) என்னும் பத்திரிகையில் காணப்படுகிறது. M. கெலர்மான்

என்னும் பெண்மணி, 140-இலிருந்து 72 வரை உள்ள 'நுண்ணறிவு ஈவுகள்' (Intelligent quotients) வாய்க்கப்பெற்ற குழந்தைகளுக்குக் கற்பிக்கின்றார். இப் பரிசோதனையில், கல்லூரிப்படிப்பைத் தொடர்ந்து பெறாத குழந்தைகளிடமிருந்தும், அசாதாரண பலனைப் பெற்றுள்ளார். அவர் ஒரு பிரெஞ்சு மாது; இலக்கணப்பள்ளியில் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்; இப் பரிசோதனையை 1961–இல் தொடங்கினார். இக்கால-மொழிகளைத் தொடக்கப்பள்ளியில் கற்பிப்பது 'சாத்தியமானதுமட்டு-மன்று, விரும்பத்தக்கதொன்றுமாகும்' என்னும் உண்மையைக் கண்டு-பிடித்தார். தொடக்கமுதல், அவர் வாய்மொழிமூலமே கற்பித்துவருகின்றார். விளக்கப்படங்கள், ஒலிப்பதிவுகள் (Tapes), வர்ணச்சித்திரங்கள், சுவரொட்டிச்சித்திரவிளம்பரங்கள், கைப்பொம்மையாட்டங்கள் (glove pup-pets) இவற்றின்மூலம் ஊக்க மூட்டிச் சொற்களைக் கற்பிக்கின்றார்; வரிவடிவில் உள்ள சொற்களைப் படிப்பதில் குழந்தைகளுக்குள்ள மனநெருக்கடி-யைப் போக்குகின்றார். கணக்கு, பூகோளம், சரித்திரம், செய்யுள் இவ் வகுப்புக்களில், சிறு பிரெஞ்சுவாக்கியங்களில், சிறுவரும் சிறுமியரும் தங்கள் கருத்தை வெளியிடுதற்குத் தைரியமூட்டுகின்றார்; கிளிப்பிள்ளையைப் போல, சொல்லுவதைத் திருப்பிச் சொல்லும் முறையை மேற்கொள்ள-வில்லை. குழந்தைகள் தாமே சொற்றொடர்களை எண்ணிப் படைக்கும் முறை கையாளப்படுகின்றது. இலக்கணவறிவோடு பேசும் முறை பின்னரே கற்பிக்கப்படுகின்றது.

இப் பரிசோதனையில் குழந்தைகள் மிக்க உற்சாகத்தோடு ஈடுபடு-கின்றனர். இம் முறை, "பொருள் நிறைந்ததாயும், நற்பயனையும் வெற்றி-யையும் தருவதாயும் உள்ளது"—என்பதே அவ் வாசிரியர்கருத்து.

x x x

உதவியாசிரியரின் சங்கம், உதவியாசிரியைகளின் சங்கம், செகண்டரி பள்ளிகளின் தலைமையாசிரியர்களின் சங்கம், தலைமையாசிரியைகளின் சங்கம்—ஆகிய இந் நான்கு கூட்டுச்சங்கங்களைச் சார்ந்த ஆங்கிலவாசிரியர்-கள், வியட்நாம் ஆசிரியர்களுக்குப் பொருளுதவி செய்தனர்.

x x x

ஆஸ்திரியா நாட்டிலுள்ள வயதுமுதிர்ந்தோர் தம் கல்விப்பயிற்சியைத் தொடர்ந்து பெறுதற்குரிய பல முறைகளிலும் காட்டும் அக்கறை மேலும் மேலும் வளர்கின்றது. அந்நாடுமுழுதும் 1261 கிளைகளோடு கூடிய 321 முதியோர்கல்விநிலையங்கள் இருக்கின்றன. அந் நாட்டின் மாகாணங்களில் உள்ள அதிகாரிகள், சிற்றூர்களிலும் சிறிய சேரிகளிலும் வாழும் முதியோர் கல்விகற்பதற்குரிய எல்லாவித அநுகூலங்களையும் செய்துவருகின்றனர். மொழி, தொடக்கமருத்துவம், தத்துவசாஸ்திரம், இலக்கியம், ஸங்கீதம் இவற்றைப்பற்றிய பாடங்களையும் உபந்யாசங்களையும் அம் முதியோர் மிக விரும்புகின்றனர்.

x x x

ஸ்காட்லாந்து எடுகேஷனல் இன்ஸ்டிட்யூட்-என்னுஞ் சங்கம், சென்ற ஆண்டு, அந் நாட்டில் கல்வித்துறையில் செய்த செயல்களைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, உத்தியோகநிபந்தனைகள், சம்பளம், ஆசிரியர்-பற்றுக்குறை, பட்டமளிப்புமுறை, தகுதியுள்ள மாணுக்கர்க்குக் கல்லூரியில் தொடர்ந்து படிப்பதற்குரிய இடங்கள் பெறஇயலாமை—இவற்றைப்பற்றிக் கூறியுள்ளது.

பல வேறு முக்கிய 'கமிட்டிகள்', ஆசிரியர்களுக்கும் கல்வியதிகாரிகளுக்கும் இடையே உள்ள தொடர்புகளைக்குறித்து, அறிக்கைகள் வெளியிட்டுள்ளன. அச் சங்கத்தால் சம்பளத்தைப்பற்றிய திட்டங்கள் தயார்செய்யப்பட்டு, 'நேஷனல் ஜாயிண்ட் கௌன்ஸி'லுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (இவைகள் இன்னும் முடிவுபெறவில்லை; கலந்து பேச்சு-வார்த்தை நடத்தும் நிலையில் இருக்கின்றன).

EIS மேலும் கூறுவது வருமாறு: "போதனுமுறைப்பயிற்சி பெற்று நற்சாட்சிப்பத்திரம் பெற்ற ஆசிரியர்களின் தொகை மிகக் குறைவாய் இருக்கிறது. இப் பிரச்சினை கடினமாகவே உள்ளது. ஆசிரியர்கல்லூரிகளில் (Colleges of Education) சென்ற ஆண்டு பயின்ற மாணுக்கர் தொகை 5635; இவ்வாண்டு பயில்பவரின் தொகை 6132. சென்ற ஆண்டினைவிட இவ்வாண்டில் படிப்போர்தொகை மிகுதியாய் இருப்பது பாராட்டத்தக்கதே. ஆயின், இத்தொகை சிறிதும் போதாது; அக் கடும் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. இன்னும் ஒரு போதனுமுறைக்கல்லூரி நிறுவுதற்கு வேண்டிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஆயினும், இப்பொழுது இருக்குங் கல்லூரிகளில் உள்ள குறையை நீக்குதற்கு இதுமட்டும் போதாது. தக்க முறையில் போதனுமுறைப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் பற்றுக்குறையால், பள்ளிக்கூடங்களில் பயிற்சி பெருத எண்ணற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதைப்பற்றி EIS—சங்கம் மிகக் கவல்கின்றது.

வருங்காலக்கல்வியைப் பற்றி 1962 டிசம்பரில் பர்த் நகரில் நடை-பெற்ற EIS காங்கிரஸ் விவாதித்து ஆராய்ந்தது. பத்திரிகை, ரேடியோ, டெலிவிஷன் இவைகள் கல்வியைக்குறித்தும் கற்பிக்கும் புதுமுறைகளைக் குறித்தும் மிக்க கவனம் செலுத்துகின்றன-என்று அக் காங்கிரஸ் தனது மிக்க திருப்தியை வெளியிட்டது. அந் நாட்டு ஆசிரியர்கள் அந்த 'இன்ஸ்டிட்யூட்டின்'மூலம் செய்துவரும் முயற்சியே இவ்வுயர்நிலைக்குக் காரணம். அதனுல் இப் பெருமை அவர்களுக்கே உரியதாகும்.

x x x

The Ligue Francaise de l'Enseignement-என்னும் பிரெஞ்சு ஆசிரியர்சங்கம், தன் இனிவருங் கூட்டங்களை வருங் கோடைக்காலத்தில் 'ஐக்ஸ்-என்-பிராவென்ஸ்,' 'நைஸ், என்னும் இடங்களில் நடத்து-வதாகத் திட்டமிட்டிருக்கின்றது. இளைஞர்க்கிடையேயும், பல்வேறு நாடுகளிலுள்ள ஆசிரியர்களுக்கிடையேயும் நட்புத்தொடர்புகளை ஏற்படுத்தி நிலைநிறுத்துவதே அதன் நோக்கம். தொகுதிப்பண்பாட்டுச்செயல் முறைகளும் விளையாட்டுப்பொழுதுபோக்குக்களும் பல நடத்துதற்கு முன்-னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கூட்டங்கள் நிகழுமிடம் பிரான்ஸ் தேசத்தின் வளமும் அழகும் மிக்க-நற்பழக்கவழக்கங்களைக் கொண்ட—கண்ணைக் கவரும்—பிரதேசம்; ஆதலின், அதைப்பற்றிய ஆராய்ச்சியில் இவ்வாண்டுத்திட்டத்தின் பெரும்பகுதி செலவிடப்படும்.

அக்கூட்டங்கள் ஜூலையிலும் ஆகஸ்டு மாதத்தின் முற்பகுதியிலும் நடைபெறும். இவற்றைப்பற்றி அறியவேண்டுவோர், Centra] pour la-Corporation Culturelle Internationale, 3 rue Recamier, Paris 7e, என்னும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

x x x

அமெரிக்காஸ்




1923 மார்ச்சு வெளியீட்டிலிருந்து, கானடா ஆசிரியர் ஸமஷ்டியின் (Canadian Teachers Federation) பத்திரிகையான நியூஸ்லெட்டர் (News-letter) ஒரு புதிய முகப்போடு, மாறுதல் பெற்று வெளிவருகின்றது; CTF-இன் சொந்த அச்சகத்திலேயே அச்சிடப்பெற்று, அளவிலும் தோற்றத்திலும் மாறுபாடு பெற்று நன்கு விளங்குகின்றது. அதன் 'போர்டு ஆப் டைரக்டர்ஸ்'ஆல் தேர்ந்தெடுத்துக்கொள்ளப்பட்ட புதிய CTF குறி தலைப்பில் இணைக்கப்பட்டுள்ளது. "அக் குறியின் இணைக்கும் பகுதிகளாக. எம் சங்கப்பெயரின் முதற்குறியீட்டெழுத்துக்களே அமைகின்றன. எம் தேசீயத்தொண்டு கானடா தேசப்படத்தால் பெயரிடப்பட்டுள்ளது. அது பூகோளப்படத்தின் ஒரு பகுதியின்மேல் அமைக்கப்பட்டுள்ளது. உலக-நன்மையில் எங்களுக்குள்ள அக்கறையை அது வெளியிடும். அதன் நடு-வில் (இருக்கவேண்டிய இடத்தில்) ஆசிரியரின் உருவமொன்று அமைந்துள்ளது. அதன் வலப்பக்கத்தில் சிறுவர்களைக் காணலாம். அவ் வாசிரிய-வுருவத்தின் கை இறுதிப்பகுதியைச் சுட்டிக் காட்டுகின்றது. இது ஆசி-ரியர் தம் தொழிலை விசேஷத்திறமையோடு செய்துவருவதைக் குறிக்கும்.

x x x

Federation Uruguaya del Magisterio— என்னும் ஆசிரியர்சங்கத்தின் உறுப்பினர்களும் உருகுவே நாட்டுத் தொடக்கப்பள்ளியாசிரியர்களுமாகிய சிலர் 1963 மார்ச்சு 4-இல் WCOTP-இன் தலைமைக்காரியாலயத்துக்கு விஜயஞ்செய்தனர். அவர்கள் ஸெகரெடரி-ஜெனரல் Dr. வில்லியம் G. கார் என்பவரைச் சந்தித்துப் பேசியபொழுது, WCOTP-யின் திட்டத்தில்

கலந்து தொண்டாற்றுவதில் உள்ள தம் அக்கறையைத் தெரிவித்துக் கொண்டனர்.

x x x

1963 மே 23-25-இல், ஒட்டாவா-இல், UNESCO, 'கலேவளர்ச்சிச்-குப் படக்காட்சிகள் செய்யவேண்டுபவை'—என்பதைக்குறித்துத் 'திருவிழா' ஒன்றும், 'ஸெமினர்' ஒன்றும் நடத்துகின்றனர்.

ஐரோப்பா, ஐக்கியமாகாணங்கள் (அமெரிக்கா), கனடா இந் நாடுகளில் உள்ள புகழ்பெற்ற கலேஞர்கள், பேசும்படம்தயாரிப்போர், 'டெலிவிஷன்'தயாரிப்போர் ஆகியோர் கலேயாராய்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் நிழற்படம் பயன்படும் முறையைப்பற்றி முற்றிலும் ஆராய்வர்.

x x x

WCOTP தலைமைக்காரியாலத்துக்கு அண்மைக்காலத்தில் விஜயஞ்செய்தோர்





இடப்பக்கம்: 'லைபீரியா' நாட்டு 'மன்ரோவியா' நகரில் உள்ள மக்கள்கல்லூரிக்குத் (Peoples' College) தலேவரான எலிசபெத் காலின்ன என்னும் பெண்மணியார் 1951-இல் மால்ஸாவில் நடைபெற்ற WOTP மகாநாட்டுக்கும், 1961-இல் புது டெல்லியிலும் 1962-இல் ஸ்டாக்ஹோமிலும் நடைபெற்ற WCOTP மகாநாடுகளுக்கும் விஜயஞ்செய்தார். அவர் முதியோர்கல்வியைப்பற்றி ஆராயும் WCOTP-கமிட்டியின் வேலேயில் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டுள்ளார். அவர் இப்படத்தில் அக் கமிட்டியின் காரியதரிசியான திரு தாமஸ் மாக்லர்னுடேடு இருப்பதைக் காணலாம்.

வலப்பக்கம்: CTF காரியதரிசியும் பொக்கிஷதாருமான ஜால்டு நேஸன், WOCTP ஸெகரெடரி-ஜெனரல் வில்லியம் G. கார் என்பவரோடும், உதவி ஸெகரெடரி-ஜெனரல் M. தாமஸனுடேடும் உரையாடிக்கொண்டிருப் பதை இப் படத்தில் காணலாம்.



இம் மார்ச்சுமாதத்தில் WCOTP தலைமைக்காரியாலயத்திற்கு விஜயஞ் செய்த ந்யாஸாலாண்டு அரசாங்கவதிகாரிகளிருவரை இப் படத்தில் காணலாம். வலப்பக்கத்தில் இருப்பவர் கல்விமந்திரியான மேன்மைதங்கிய M. W. K. சியூம் என்பவர்; மற்றவர் உள்நாட்டு அரசியலமைச்சராகிய மேன்மை தங்கிய H. B. சிபெம்பா என்பவர். அவ்விருவரும் WCOTP-யின் திட்டத்தில் தமக்குள்ள அக்கறையை வெளியிட்டு 'ந்யாஸாலாண்டு' தேசிய ஆசிரியர்சங்கத்தோடு அவ்வுலகஸம்மேளனம் நெடுங்காலத் தொடர்புகொண்டுள்ளதைப் பாராட்டினர்.

x x x

ஆசியா :

ஆப்காவிய நாட்டு ஆசிரியர்கள், தம்மைப் போன்ற தகுதியுடையவர் அரசாங்கவலுவலகத்தில் பெறும் ஊதியத்தைவிட அதிகத்தொகையை இப்பொழுது பெறுகின்றனர். தொடக்கப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர்-பற்றுக்குறையை நிவர்த்திசெய்வதற்கு அரசாங்கத்தார் இம் முறையைக் கையாள்கின்றனர்.

x x x

எழுதப்படிக்கக்கற்றல் என்பதற்கு 1961-இல் பாகிஸ்தான் பின்வருமாறு விளக்கம் கூறியுள்ளது: "ஒரு மொழியில் வரையப்பட்ட எளிய கடிதத்தை, பொருளை அறிந்துகொண்டு படிக்கும் ஆற்றல்". இந்த அளவை வைத்துக்கொண்டு, அவ்வரசாங்கம், கிழக்குமேற்கு பாகிஸ்தான் நாடுகளில் எழுதப்படிக்கத்தெரிந்தவர்களின் தொகை சிறுகச்சிறுக உயர்ந்துவருகின்றது—என்று உரிமையோடு பாராட்டிக்கொள்கின்றது.

இவ் வுயர்வு முக்கியமாக நகரப்பகுதிகளிலேயே காணப்படுகின்றது. அங்கும், எழுதப்படிக்கத்தெரிந்த பெண்களின் தொகை அவ் வறிவு பெற்ற ஆண்களின் தொகையில் நாலில் ஒரு பங்கே ஆகும்.

---

இந்திய நாட்டிலுள்ள சென்னை நகரில் (Madras) தென்னிந்திய ஆசிரியர் சங்கம் (S. I. T. U.) மாதந்தோறும் வெளியிடும் பாலர் கல்வி என்னும் பத்திரிகையோடு, எகோவின் தமிழ்வெளியீட்டையும் இணைத்துப் பிரசுரம்செய்யுமாறு WCOTP முன்னேற்பாடு செய்துள்ளது.

இந்தியா, இலங்கை, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலுள்ள தமிழ்மொழிபேசும் ஆசிரியர்கள் இனி WCOTP-இன் உலகத்திட்டத்தை இன்னும் அதிகமாக அறிந்துகொள்ளுதற்கு வாய்ப்புப்பெறுவர்.

இராக் நாட்டில் அண்மையில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாகக் கொடுந்துன்பத்திற்கு ஆளாக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும் அவர்கள்குடும்பங்களுக்கும் உலகஸம்மேளனம் பொருளுதவி செய்துள்ளது.

x x x

ஜப்பானில் உள்ள ஸர்வதேச கிறிஸ்டியன் சர்வகலாசாலை அரசியல்-அலுவலகத்தில் தொண்டுசெய்தற்குரிய பயிற்சியை அளிப்பதற்கு ஒரு கலைக்கூடத்தை (Graduate School of Public Administration) நிறுவியுள்ளது முக்கியமாக இத் துறையில் பயிற்சி அளிப்பதற்கென்று இந் நாட்டில் முதன்முதல் நிறுவப்பட்ட பல்கலைக்கழகக்கல்விநிலையம் இதுவேயாகும். ஊசாளு மிஷ பல்கலைக்கழகத்தின் முன்னாள் தலைவரான Dr. மாஸா மிசி ராயமா என்பவரே இக் கலைக்கூடத்திற்குத் தலைவர். இத் துறையில் திறமைபெற்ற அதிகாரிகள் இல்லாக்குறையைத் தீர்ப்பதுவே இதன் குறிக்கோள்.

Dr. ராயமா, பத்திரிகைநிருபரிடம் உரையாடிக்கொண்டிருந்த-பொழுது, அரசாங்கத்துறையில் மேலும்மேலும் வளர்ந்துவரும் சிக்கலான கடமைகளை ஏற்றுச் செய்தற்கு ஏற்ற ஆற்றலும் நற்பயிற்சியும் உள்ள அதிகாரிகள் இல்லாத குறையை எடுத்துக்கூறி, தம் வருத்தத்தைத் தெரிவித்தார்; ஸர்வதேச சங்கங்களில் கலந்துகொள்ளுதற்குத் தக்க பயிற்சிபெற்ற பிரதிநிதிகளை ஜப்பான் அனுப்புதற்கு இயலாமையைக்-குறித்து வருந்தினர். இக்காலத்தில் ஜப்பான் அரசாங்கவுத்தியோகத்தில் உள்ளவர்களுள் தொண்ணூறு சதவிகிதம் சட்டப்பள்ளிகளிலிருந்து வந்தோராவர்.

Dr. ராயமா மேலும் கூறியதாவது: "ஆதலின், ஜப்பான் நாட்டு அரசியலதிகாரிகள் குறுகிய மனம்படைத்தவராய் இருக்கின்றனர். அவர்கள் சட்டமுறையிலும் அரசியல்முறையிலுமே அரசாங்கக்காரியங்களை நடத்து-கின்றனர். ஆயின், சிக்கல் மிக்க அரசாங்கக்கடமைகளுக்குப் பொருளாதாரவறிவும் மனிதவர்க்கமுன்னேற்றக்கலையறிவும் பயிற்சியும் மிக இன்றியமையாதவையாய் இருக்கின்றன".

x x x

Persatnan Guru Republic Indonesia—என்னும் இந்தோனேஷியா ஆசிரியர்சங்கத்தின் தலைவரான M. E. சுபியாதிறுதா என்பவர், பாலி நாட்டு ஆசிரியர்களுக்கு உலக ஸம்மேளனம் உதவிசெய்ததற்காகத் தம் நன்றியறிதலை WCOTP ஸெகரெடரி-ஜெனரலுக்குக் கடல்தந்தி-மூலம் தெரிவித்தார். உலக ஸம்மேளனமும் பிற தேசங்களும் அன்புடன் அளித்த பணவுதவி, எரிமலையினுல் தங்கள் வீடுகளை இழந்து பரிதவிக்கும் பாலி நாட்டு ஆசிரியர்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

x x x

வியட்நாம் ஆசிரியர் பொதுச்சங்கம் (The General Association of Teachers of Vietnam), 1963 மார்ச்சு மாதத்தில் ஸைகானில் கூட்டின வருஷாந்திர மகாநாடு ஐந்து நாள் நடைபெற்றது. சிறப்பு மிக்க அக் கூட்டம் மார்ச்சு 17-இல் முடிவுபெற்றது.

ஆங்கு, 17,000 ஆசிரியர்களுக்குப் பிரதிநிதிகளாக விஜயஞ்செய்திருந்த நானூற்றுவர் தம் சங்கம் WCOTP-இன் உலகத்திட்டத்தில் தொடர்ந்து பங்கெடுத்துக்கொள்ளல்வேண்டும் என்று முடிவுசெய்தனர்; WCOTP-உம், அதன் உறுப்புச் சங்கங்களும் 'வியட்காங்-இன் பயங்கரச் செயல்களுக்கு ஆளாகி மிகத் துன்புற்ற 'வியட்நாம்' ஆசிரியர்களுக்குச் செய்த உதவியை மனப்பூர்வமாகப் பாராட்டினர்.

1963-இல் கூடிய வருஷாந்திர மகாநாட்டில் GATV-இன் பிரதிநிதிகள் செய்தபின் முடிவுகள் வருமாறு :

(1) பல்வேறு நாடுகளுக்கிடையே பரஸ்பர அன்பையும் நட்புறவையும் ஒற்றுமையையும் வளர்க்க மும்முரமாகப் பாடுபடுதல் வேண்டும் என்று விரும்புகின்றது ;

(2) சாதாரணமாக நடைபெறும் பள்ளிக்கூடவேலைகளுக்கு ஊறு விளைக்கும் பயங்கரக்கொடுஞ்செயல்களெல்லாவற்றையும் கடுமையாகக் கண்டிக்கின்றது;

(3) உலக ஸம்மேளனம் நிறைவேற்றிவருஞ் செயற்கரிய செயல்களை மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றது;

(4) (a) GATV-க்கு உதவிசெய்ததற்கும்; (b) 'வியட்நாம்' ஆசிரியர்களின் தொழிலுரிமைகளுக்கு எதிராக நடைபெறும் அழிவுவேலைகளையும் அந் நாட்டு மாணுக்கருக்கு உள்ள கல்விவாய்ப்புக்களையும்பற்றி நன்கு ஆராயும் ஸர்வதேசக்கமிஷன்ஒன்றனை அனுப்பியதற்கும் ; (c) GATV-க்குச் சகோதரவாழ்த்துக்களை அனுப்பியதற்கும்; (d) 'கொரியா' கல்விச்சங்கங்களின் ஸமஷ்டியைச் சார்ந்த தாய் ஸி. துங் என்பவரை, GATV-இன் 1963 வருஷாந்திர மகாநாட்டுக்கு, WCOTP-இன் பிரதிநிதியாக விஜயஞ்செய்ய, அனுப்பியதற்கும்—மனப்பூர்வமான வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

x x x x

பசிபிக் :

ஆஸ்திரேலியா ஆசிரியர் சங்கம் (Australian Teechers' Federation) தம் வருஷாந்திர மகாநாட்டை, 1963 ஜனவரியில் ஸிட்னி நகரில் கூட்டிற்று. அங்கு விஜயஞ்செய்திருந்த பிரதிநிதிகள், இக் காலத்து மாணுக்கரைப் பொறுப்பு மிக்க ஸர்வதேசக் குடிமக்களாக ஆக்கும் அவசியத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆஸ்திரேலியாவில்மட்டுமன்றி உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் உள்ள ஆசிரியரனைவரும், பள்ளிக்கூடப்பாடத்திட்டத்யைும் பள்ளிக்கூடத்தை நடத்தும் முறையையும் மீண்டும் ஆராய்தல் வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

1. தம்தம் நாடுகளின் சரித்திரம், அரசியல்முறை இவற்றை அறிந்துகொள்ளுதல் ;

2. பிற நாட்டவரின் பண்பாட்டுச்சிறப்பையும் அரசியல்கொள்கைகளையும் சரியாக உணர்ந்து மதித்தல்.

3. உலகமக்களிடையே ஒற்றுமையும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளுஞ் சக்தியும் இன்றியமையாதவை என்பதைத் தெரிந்துகொள்ளல்—

ஆகிய இவற்றைக் கல்வியதிகாரிகள் மாணுக்கர்க்குக் கற்பித்தல் வேண்டும்.

ஆசிரியத்தொழிலை முதன்முதல் மேற்கொள்ளும் ஒருவர்க்கு என்ன என்ன தகுதிகள் (யோக்கியதைகள்) இருத்தல் வேண்டும் என்பதனை வரையறுத்து முடிவுசெய்யும் பொறுப்பினை, ATF-இன் கிளை ஒவ்வொன்றும் ஏற்றுக்கொள்ளல்வேண்டும் என்றும், அம் மகாநாடு வற்புறுத்திற்று. ஒவ்வொரு கிளையும், ஆசிரியர்யோக்கியதாபத்திரம் அளிக்கும் ஆற்றல் பெற்ற கல்விக்கழகமொன்றனைத் தம்தம் நாட்டுப்பகுதியில் நிறுவி விருத்திசெய்தற்கு வேண்டிய முயற்சியைச் செய்தல்வேண்டும்.

மேற்கு ஆஸ்திரேலியாவைச் சார்ந்த திரு. N. E. ஸாம்னன் என்பவர் ATF-இன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

x x v

---

**World Confederation of Organisations of the Teaching Profession**
**1227, 16th St N. W. Washington 6 D.C., U.S.A.**

**உலக ஆசிரியர் ஸம்மேளனம்** (WCOTP)

**1227, பதினாருந்தெரு**, N. W., **வாஷிங்டன் 6**, D. c., U. S. A.

'எகோ' என்னும் இப் பத்திரிகை WCOTP–ஆல் மாதந்தோறும் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ் என்னும் மொழிகளில் 'வாஷிங்டன்' D.C-யிலிருந்து வெளியிடப்படுகின்றது; 'அரபி' மொழியில் 'பீரட்'டிலிருந்தும், 'ஜப்பான்' மொழியில் 'டோக்கியோ'விலிருந்தும், 'கொரிய' மொழியில் 'சியோலி'லிருந்தும், 'போர்ச்சுகீ'ஸில் 'ஸா பௌலோ'விலிருந்தும், 'வியட்நாம்' மொழியில் 'ஸைகோ'வினிருந்தும் வெளியிடப்படுகின்றது. பிரத்தியேக ஆங்கிலப்பதிப்புக்கள் 'ஆக்ரா', 'நைரோபி', 'மதராஸ்' என்னும் இடங்களிலிருந்து வெளியிடப்படுகின்றன. இச் செலவில் ஒரு பகுதியை UNESCO ஸ்தாபனம் அளித்துதவுகின்றது. எகோ உறுப்புச்சங்கங்களுக்கு இது விநியோகிக்கப்படுகின்றது. ஆயின், இதனைப் பெற விரும்புவோரும் நிலையங்களும் சந்தாவை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.


| | |
|---|---|
| ஸர் ரோனல்ட் கௌல்ட், | தலைவர் |
| S. நடராஜன், | உபதலைவர் |
| வில்லியம் G. கார், | ஸெக்ரெடரி-ஜனரல் |
| ஜான் M. தாம்ஸன், | உதவி ஸெக்ரெடரி-ஜனரல் |
| பால்டுவின் லி, | டைரக்டர், இன்பர்மேஷன் ஸர்விஸஸ் |
| பார்பாரா P. ஹாஸ்கின்ஸ், | ஆசிரியர் (Editor) |

துணை ஆசிரியர்கள் :

ராபர்ட் லாப்
ஜீன் பால் ஸவரி
ஜாகலின் லாஃபலர் (வாஷிங்டன், D.C.)
அஃபிஃப் பால்பகி (பீரட்)
ஹிரோஷி யோஷிடா (டோக்கியோ)
ட்ருட் ஹாப்ட்பான் (ஸா பௌலோ)
ட்ரான் பிச் லன் (ஸைகோன்)
S. நடராஜன் (மதராஸ்)
மியுங்—ஸூ லிம் (ஸியோல்)

## தலைமைக் காரியாலயம்

WCOTP, May 30-முதல் ஜூன் 5-வரை, டில்லியில், ஆசியாவின் கல்விநிபுணர்கூட்டமொன்றை (Asian Expert Meeting) முதன்முதல் கூட்டும். ஆஸ்திரேலியா, ப்ருனி, பர்மா சிலோன், சீனு, ஹாங்காங், இந்தியா, இரான், இஸ்ரேல், ஜப்பான், கொரியா, மலேயா, நியூஸிலண்டு, பாகிஸ்தான், ஃபிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, துருக்கி, வியட்நாம்–என்னும் நாடுகளில் உள்ள ஆசிரியர்சங்கங்கள், தெரிந்தெடுத்த நிபுணர்அறுபதின்மருக்கு மேற்பட்டவர் இக் கூட்டத்திற்கு விஜயஞ்–செய்தல்வேண்டும் என்று வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளனர். ஆப்கானி–ஸ்தானம், கம்போடியா, இந்தோனேஷியா, லாவோஸ், நேபாளம், ஒகினவா — என்னும் நாடுகளில் உள்ள அறிஞரும் அக்கூட்டநிகழ்ச்சிகளைக் கவனித்து அறிந்துகொள்வதற்கு, அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன.

அக் கூட்டம் டில்லியில் புது சர்வதேசநிலையத்தில் கூடும். WCOTP-இன் உபதலைவரான ஸ்ரீமான். S. நடராஜன்அவர்கள் அதற்குத் தலைமைதாங்குவார். WCOTP-இன் டில்லிக்காரியாலயத்தைச் சார்ந்த E. W. ஃப்ராங்க்லின் என்பவரும், WCOTP-இன் ஜப்பான் பிரசுர-காரியாலயத்தைச் சார்ந்த ஹிரோஷி யோஷிடா என்பவரும் அத் தலைவருக்கு வேண்டிய உதவியைச் செய்வர். WCOTP ஆசியாவிற்கு என்று நியமித்த தனியதிகாரியாகிய வில்லியம் E. உல்ரிச் என்பவர் இத் திட்டத்தை இணைத்து நடத்தும் பொறுப்பாளி ஆவார்.

x x x

**ஆஃபிரிகா :**

**ஸ்டீபன் J. கியோனி** என்பவர் KNUT–இன் புதுக்காரியதரிசி; கிழக்கு ஆப்பிரிக்காவிற்கு WCOTP–இன் பிரதிநிதி. அவர் மார்ச்சு மாதத்தில் அவ்வுலக ஸம்மேளனத்தின் சார்பில் ஸான்ஸிபார் நாட்டில் சுற்–றுப்பிரயாணம் செய்து, ஆசிரியத்தொழிலின் அமைப்பு, நிர்வாகம் என்னும் விஷயங்களைப்பற்றி அந்நாட்டு ஆசிரியத்தலைவர்களோடு கலந்து ஆலோசித்தார். அவர் செய்த உதவியைப் பாராட்டி, ‘ஸான்ஸிபார்’ அரசாங்கவாசிரியர்சங்கத்தின் தலைவரான ஜூமா ஷிமிடிர் என்பவர், Dr. வில்லியம் G. கார் என்பவருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

x x x

ஆஃபிரிகாவில் கல்வித்தொண்டு செய்வதற்கேற்ற பல்கலைக்கழகப் பட்டதாரிகளை தயார்செய்யும் கூட்டுப்பல்கலைக் கழகத்திட்டம் 1963-64-இல் தொடர்ந்து நடைபெறும். இப் பயிற்சியை அளிப்பவை, ‘கொலம்பியா’ பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஆசிரியர்கல்லூரியும், ‘லண்டன்’ பல்கலைக் கழகத்தைச்சார்ந்த கல்விக்கழகமும் (Institute of Education) ஆகும். இப் போதனுமுறைக்கல்வித்திட்டத்தில் தொடர்புடையவை ஆஃபிரிகா, இங்கிலாந்து, அமெரிக்கா என்னும் மூன்று நாடுகளாகும். அநுபவம் பெற்ற தொடக்கப்பள்ளியாசிரியர்களும் கல்விநிர்வாகிகளும் ஆஃபிரிக்க ஆசிரியர்போதனுமுறைக்கல்லூரிகளில் நியமனம் பெறுதற்குரிய வாய்ப்புக்களை அவர்களுக்கு இத் திட்டம் அளிக்கின்றது. ஸெகண்டரிபள்ளி–யாசிரியர்களும் அசாதாரணஅறிவும் பரந்த கலையறிவும் பெற்ற பல்கலைக்–கழகப்பட்டதாரிகளும் இப் பயிற்சியைப் பெற்று மத்திய, கிழக்கு, மேற்கு

ஆஃபிரிக்கநாடுகளில் உள்ள 'ஸெகண்டரி' பள்ளிக்கூடங்களில் நியமனம் பெறும் வாய்ப்பினைப் பெறுவர்.

இக் கூட்டுத்திட்டம்முழுதும் ஆராயப்படுதற்கு ஓர் ஆண்டு தேவைப்படும். அவ்வாண்டில் ஒரு பாதி கொலம்பியா ஆசிரியர்கல்லூரியிலும், மற்றொரு பாதி லண்டன் பல்கலைக்கழகத்திலும் செலவிடப்படும். ஆஃபிரிகா நாட்டுப்பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படும் முறைகளுக்குத் தனிக்கவனம் அளிக்கப்படும். ஆஃபிரிகா நாட்டுப் பல்கலைக்கழகங்களில் உள்ள பேராசிரியர்களும் இதில் கலந்துகொள்ள அழைக்கப்படுவர். கிராமங்களைப்பற்றிய ஆராய்ச்சியும் அங்கு நடைபெறும். வசந்தகால–விடுமுறையில், பல நாட்டுக்கல்விநிலைகளை ஒப்பிட்டு அறிவதற்கு, ஐரோப்பாக்கண்டத்தில் சுற்றுப்பிரயாணமொன்றும் நடைபெறும்.

x x x

மிகப்பரந்த கொள்கை உள்ள திட்டமொன்றனை மேற்கொள்ளல் வேண்டும் என்று UNICEF ஸ்தாபனம் 1961-இல் முடிவு செய்ததன் பயனுகை, உலகம்முழுதும் பரந்த பல தொழில்நிலையங்கள் விரிந்து காணப்–படுகின்றன. ஆஃபிரிகாவில் UNICEF தன் தொண்டுகளை விரிவுபடுத்தி–யுள்ளது; பல சமூகத்தொண்டுப்பள்ளிகளை நிறுவியுள்ளது; புஷ்டியுணவு, குழந்தைகளைப்பற்றியும் அவற்றின் நோய்களைப்பற்றியும் கூறுங் கலை, சமூகத்தொண்டுகள்–இவற்றில் உயர்ந்த வகுப்புக்களை நடத்துதற்குத் தகுதிபெற்ற ஆசிரியர்களைப் பல்கலைக்கழகங்களுக்கு அளித்து உதவி–செய்கின்றது.

ஆஃபிரிகாவிலுள்ள அலுவலகத்தின் 'டைரக்ட'ரான திரு ஸ்டீவர்ட் ஸட்டன் என்பவர் இவ்வாண்டுக் குளிர்காலத்தில் நடைபெற்ற நிர்வாகக் குழுவின் கூட்டத்தில், 'ஆஃபிரிகா தன் நாட்டுக் குழந்தைகளுக்கு என்ன என்ன செய்தல்வேண்டும் என்று தேர்ந்தெடுத்துரைக்கின்றதோ, அவற்றை நன்கு மதித்து ஆதரித்து ஆவன செய்தலே'—அக் கண்டத்தில் UNICPF வருங்காலத்தில் செய்யப்போகும் வேலைப்பகுதியாகும் என்று கூறினர்.

x x x

## ஸர்வதேசச்செய்திகள்

"திட்டமிட்ட போதனையும், கற்பித்தற்கு உதவுங் கருவிகளும்" என்னும் பொருள்பற்றி ஆராய, ஜூலை 9 முதல் 15 வரை மேற்கு பர்லின் நகரில் ஒரு ஸர்வதேச மகாநாடு கூட்டப்பெறும். "தற்காலத்துக்கு ஏற்ற கல்வி, போதனுமுறை, கற்பிக்குங் கருவிகள்"—என்னும் பொருள்பற்றி தொடர்ந்து நடைபெறப்போகும் பல மகாநாடுகளுள் இதுவே முதலது ஆகும். WCOTP என்னும் உலக ஸம்மேளனம் ஜூலை மகாநாட்டை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. WCOTP-இன் பாரிஸ் அலுவலகத்தின் டைரக்டரான திரு. வில்ஹெம் எபர்ட் என்பவர் அச் சங்கத்தின் பிரதிநிதியாக விஜயஞ்செய்வர்.

முதலிரண்டு நாட்களில், 'திட்டமிட்ட போதனை, கலவியில் அதற்குரிய இடம், ஆசிரியர் மாணுக்கர் ஆகிய இருவருக்கும் அதனல் விளையும் சமூகமனேதத்துவ மாறுபாடுகள்'—என்னும் பொருள்களைப்பற்றிய—அனைவரும் கலந்துகொள்ளும்—பொதுஆராய்ச்சி விவாதங்களும், தேர்ந்தெடுத்த

அறிஞர்சிலருடைய ஆராய்ச்சிவிவாதங்களும் நடைபெறும். அவற்றின் பின்னர், ஆரம்பப்பாடங்கள் கற்பிக்கப்படும். அவற்றில் தற்காலத்தில் உள்ள பல்வேறு வகைப்பட்ட திட்டங்களும், பள்ளிக்கூடத்தில் அவற்ருல் விளையும் நற்பலன்களும் விவரித்துக் கூறப்படும்.

போதனுமுறைக்கருவிகள் முதலியவற்றைக்கொண்ட பொருட்காட்சி-யொன்றும் நடைபெறும். திட்டமிட்ட போதனையைப்பற்றிய நடமாட்டத் திட்டமொன்று (Walk-through Program) முதலிடம் பெறும். பல்வேறு ஸினிமாப் படங்களும் காட்டுதற்குத் திட்டம் இடப்பட்டுள்ளது. ஸெகண்டரி பள்ளிக்கூடத்தலைவர்களின் தேசீயசங்கத்தாரால் விருத்திசெய்யப்பட்ட அமெரிக்க நாட்டு உயர்நிலைப்பள்ளிக்கு உரிய புதுத்திட்டத்தைப்பற்றி விளக்கிக்கூறும் "And No Bells Ring" என்னும் படம் அவற்றுள் ஒன்ருகும்.

[Mr. J. லாயிட் ட்ரம்ப் என்னும் அறிஞர், 1961-இல் வெளியிடப்பட்ட பனோரமா, தொகுதி III, எண் 3-ல், அத் திட்டத்தைப்பற்றி விரிவாக எழுதிய கட்டுரையொன்று உளது.]

தேசிய உறுப்புச்சங்கங்கள் அனைத்தும் மிக்க பயனளிக்கும் இம் முக்கிய மகாநாட்டுக்குத் தக்க ஆதரவை அளிக்கும் என்று WCTP எதிர்-பார்க்கின்றது. இதைப்பற்றிப் பின்னும் அறியவேண்டுவோர், Mr. Kurt Spangenberg, Pidago-gisehe Arbeitsselle, Berlin-Schinelerg, Gurne-walstr 6-7, Germany-என்னும் விலாசத்திற்கு எழுதிப் பெறுவாராக.

x x x x



UNESCO டைரெக்டர்-ஜெனரல் ரெனே மாஹியோ, U.S.A. வாஷிங்டன் (D.C.) தேசீயக் கல்விக்கழகத் தலைமைக் காரியாலய மாளிகையில் கற்ருேர்கூட்டம் ஒன்றில் பேசுகின்ருர். அவர் UNESCO-இன் 'கானடியன் நேஷனல் கமிஷன்' கூட்டத்தில் முக்கிய உபன்யாசகராகப் பங்கெடுத்துக்கொண்டு, பின்னர் வாஷிங்டனுக்கு விஜயஞ்செய்தார்.

---

Printedby Sri S. Venkataraman at the Hind Press Private Ltd., 113, Ramakrishna Math Road, Madras-28. Published by Sri. S. Rajagopalan, B.A., L. T., for the S.I.T.U. at Raja Annamalaipuram, Madras-28.
Editor: Sri A. K. Sitaraman, B.A., L.T.